பணிகள் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. எதிர், காலத்திலே வர இருக்கின்ற முனைவர்களுக்கும் தக்க வசதியை செய்து தர அரசு இருக்கிறது என்பதனை தெரிவித்துக் கொள் கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள் 383, 384, 385 ஆகிய வினாக்கள் அமைச்சரின் வேண்டுகோளுக்கு இணங்க தள்ளிவைக்கப்பட்டுள்ளன.

1977 ஆம் ஆண்டில் ஏற்பட்ட புயல் வெள்ளத்தினால் பாதிக்கப் பட்ட பாப்பாப்பட்டி கிராம விவசாய நிலங்கள்.

*வினா எண் 386— திரு. ரா. பெரியசாமி: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா :—

(அ) திருச்சி மாவட்டம், முசிறி வட்டம், தாத்தையங்கார் பேட்டை ஒன்றியத்தைச் சார்ந்த பாப்பாப்பட்டி கிராமத்தில உள்ள சுமார் 100 ஏக்கர் நிலமும், 30 விவசாயக் கிணறுகளும், 1977 ஆம் ஆண்டு புயலினாலும், வெள்ளத்தினாலும் பாதிக்கப் பட்டு மேற்படி நிலங்களும், கிணறுகளும் மணல் மேடாக குவிந்து விவசாயம் பாதிக்கப்பட்டுள்ளது.

(ஆ) ஆம் எனில், ஆற்றின் இரு கரைகளையும், விவசாய நிலங்களையும், கிணறுகளையும் செப்பனிட அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) மற்றும் (ஆ): 1977 ஆம் ஆண்டில் ஏற்பட்ட வெள்ளத்தால் இக்கிராமத்தி லுள்ள நிலங்கள் யாவும் பெரிதும் பாதிக்கப்படவில்லை. பாதிக் கப்பட்ட நிலங்கள் மற்றும் கிணறுகள் நிலச் சொந்தக்காரர் களால சீர்திருத்தம் செய்யப்பட்டு, சாகுபடியும் செய்யப்பட்டு வருகிறது. பாண்டவ நதியின் கரையை மட்டும் உடைப்பு செப்ப னிட்டால் போதும் எனவும், இதற்கு நிவாரணம் தேவையில்லை எனவும் நிலச் சொந்தக்காரர்கள் தெரிவித்ததால மேற்படி மராமத்துபணி பொதுப்பணித் துறையினரால் மேற்கொள்ளப் பட்டது. இருந்தாலும் இந்த வெள்ளச் தடுப்பை நிரந்தரமாக தடுக்கும் வகையில் பாண்டவ நதியின் கரையை பலப்படுத்த ரூபாய் 5.26 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு தலைமைப் பொறியாளரின் (நீர்ப்பாசனம்) பரிசீலனையில் உள் ளது.